# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் II பரீட்சை – 2024 சனவரி**

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

இவ்வினாத்தாள் புதிய தொழினுட்ப அபிவிருத்திகள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் போக்குகள் ஆகியவற்றில் மேலதிக கவனத்தைச் செலுத்தி, தகவல் தொழினுட்பவியலின் ஒட்டுமொத்த பகுதிகளையும் பரீட்சித்திருந்தது. இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு தகவல் முறைமைகளைப் பாதிக்கின்ற ஒழுக்கநெறி, சமூக, மற்றும் சட்டச் சூழல்கள் பற்றிய முற்றடக்கமான புரிதல் தேவை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். இவ்வினாத்தாள் A, B, C என மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது. மேலும், அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பது கட்டாயமானதாகும்.

## பகுதி A

### வினா இல. 01

இங்கு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியலின் முழுமையான பாடத்திட்டமும் இலகுவாக புரிந்து கொள்ளத்தக்க வகையில் பரீட்சிக்கப்பட்டது. இவ்வினா ஒவ்வொன்றுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்ட 10 OTQs வினாக்களையும் தரப்பட்ட கூற்றுக்கள் ‘‘சரியானதா’’ தவறானதா’’ எனத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதவுதற்கான ஐந்து வினாக்களையும் உள்ளடக்கியிருந்தது. பெரும்பாலும் அனைத்து பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களில் அதிகமானவர்கள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளில் அரைவாசிக்கும்மேல் பெற்றது மகிழ்ச்சியான விடயமாகும்.

எவ்வாறாயினும், கீழுள்ள பாடப்பரப்புகளில் பரீட்சார்த்திகளின் அறிவு கொஞ்சம் குறைவானதாகவே இருந்ததை அவதானிக்க முடிந்தது. அவர்கள் அத்தகைய பாடப்பரப்புகளில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும் :

(1) முகில் கணினியியல்

(2) IT பாதுகாப்பு

(3) கூட்ட நிதியிடல்

இந்த நோக்கச் சோதனை வினாக்களுக்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள பரீட்சார்த்திகளுக்கு எப்போதும் அறிவுறுத்தப்படுகிறது. ஏனெனில், இப்பகுதியானது அவர்கள் இப்பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற உதவும்.

**இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

### வினா இல. 02

இவ்வினாவானது தகவல் தொழினுட்பம் மற்றும் தகவல் முறைமைகள் பற்றிய மாணவர்களின் புரிதலைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான மாணவர்கள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

**(a)** இங்கு, தகவல் முறைமையொன்றின் கூறுகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியான விடைகளாக மென்பொருள், வன்பொருள், நடைமுறைகள், மக்கள், தரவு மற்றும் தொடர்பாடல் போன்றவற்றை வழங்க முடிந்திருந்தது.

**(b)** வணிக நிறுவனங்களின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மீது தகவல் முறைமைகள் மற்றும் தகவல் தொழினுட்பம் ஆகியவற்றின் இரண்டு தாக்கங்களை விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினைத்திறன் மற்றும் போட்டி நயம் ஆகியன பற்றி எழுதியிருந்த போதிலும் சிலர் மேம்பட்ட தொடர்பாடல், பயனுறுதிமிக்க இருப்பு முகாமைத்துவம், தந்திரோபாய தீர்மானமெடுத்தல், சிறந்த வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம், தரவு முகாமைத்துவ முறைமை, கிரயம் குறைதலும் வள உத்தமமாக்கலும் போன்ற ஏனைய விடயங்களைத் தவற விட்டிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் விபரிக்காது, விடயத்தை மட்டும் எழுதியிருந்தனர். இதனால், இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த முழுப் புள்ளிகளையும் அவர்களால் பெற முடியவில்லை.

**(c)** இங்கு, தகவல் தொழினுட்பம் மற்றும் தகவல் முறைமைகள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது. இவ்விரு விடயங்களும் அடிக்கடி பரீட்சிக்கப்படுகின்ற போதிலும், சில பரீட்சார்த்திகளால் IT மற்றும் IS இற்கிடையிலான சரியான தொடர்பை இனங்காண முடியவில்லை.

**இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

**(a)** இவ்வினா ஊழியர்களிடையே வினைத்திறனான தொடர்பாடலையும் ஒத்துழைப்பையும் எளிதாக்குவதற்கான நடமாடும் சாதனங்களைத் தெரிவு செய்யும் மாணவர்களின் புரிந்துணர்வைப் பரீட்சிக்க எதிர்பார்த்தது.

பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்கள் தமது பொது அறிவைப் பயன்படுத்தி திறன்பேசிகள், வரைபட்டிகை, மடிக்கணினி / நோட்புக், அல்ரா-மொபைல் PCs, PCs, PDAs மற்றும் நெற்புக் போன்ற விடைகளை அளித்திருந்தனர்.

**(b)** இந்த வினா மேலே பகுதி (a) இல் இனங்காணப்பட்ட நடமாடும் சாதனங்கள் ஒவ்வொன்றிற்கும் கிடைக்கக்கூடிய வலையமைப்பு இணைப்புத் தெரிவு ஒன்றையும் இயங்குதள முறைமை ஒன்றையும் இனங்காணுமாறு கேட்டிருந்தது.

சில பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்பட்ட சாதனங்களுக்கான வலையமைப்பு இணைப்புத் தெரிவொன்றைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**(c)** இவ்வினா இரண்டு உப வினாக்களைக் கொண்டிருந்தது. அவை தரப்பட்ட ஒவ்வொரு தேவைக்கும் பொருத்தமான மென்பொருள் வகையை இனங்காணுமாறு கேட்டிருந்தது.

சில பரீட்சார்த்திகளால் சரியான பிரயோக மென்பொருள் வகையை இனங்காண முடியவில்லை.

சரியான விடைகளாவன :

(1) சொல் நிரற்படுத்தல் மென்பொருள் பொதி : Microsoft Word, Google Docs, Open Office Writer

(2) Desktop Publishing மென்பொருள் பொதி : Adobe InDesign, Microsoft Publisher, QuarkXPress, Serif-Page Plus, Scribus

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 04

இங்கு நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமைகள் மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் பற்றிய மாணவர்களின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலும் அனைத்து மாணவர்களும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

**(a)** IT முறைமையைத் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்தும்போதான இரண்டு காரணிகளை விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியான விடைகளை அளிக்க முடிந்திருந்தது. எனினும் சிலர் பட்டியலிட்ட விடயங்களை விபரிக்காததால் முழுப் புள்ளிகளையும் அவர்களால் பெற முடியவில்லை.

**(b)** பரீட்சார்த்திகள் தமது பொது அறிவையும் நாளாந்த அனுபவங்களையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல்- வர்த்தகம் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் பற்றிக் குறிப்பிட்டு, புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(c)** தகவல் முறைமைகளின் ''நோக்கெல்லை மற்றும் நோக்கத்தை'' கருத்திற் கொண்டு ERP முறைமைகளுக்கும் தொழிற்பாட்டுத் தகவல் முறைமைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சில பரீட்சார்த்திகளால் தெளிவாக விபரிக்க முடியவில்லை. பரீட்சார்த்திகள் சுய கற்றல் புத்தகத்தை முறையாகப் படிக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

**இவ்வினாவுக்கான செயலாற்றுகை எதிர்பார்த்த மட்டத்தில் அமையவில்லை.**

## வினா இல. 05

இங்கு, பொருள் ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய சமூக ஊடகம் மற்றும் அதன் அம்சங்கள் பற்றியும் பசுமைக் கணினியியல் நடைமுறைகள் பற்றியும் பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது.

பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

பகுதி **(a)** மற்றும் பகுதி **(b)** இல், தரப்பட்ட தேவைகளுக்குப் பொருத்தமான சமூக ஊடக அம்சங்களைப் பட்டியலிடுமாறும் பசுமைக் கணினியியல் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டு காரணிகளை விபரிக்குமாறும் கேட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் சரியாக விடையளிக்க முடிந்திருந்தது. நவீன போக்குகள் பற்றிய பரீட்சார்த்திகளின் பொது அறிவு இந்த இரு பகுதிகளுக்கும் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியிருந்தது.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளிடம் பசுமைக் கணினியியல் நடைமுறைகள் பற்றிய எவ்வித புரிதலும் காணப்படவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

**பகுதி (c)** இல், இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து பயனர்களையும் வணிகத் தரவுகளையும் பாதுகாப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எவ்வாறு முறையாகத் தணிக்கலாம் என்பது பற்றி விபரிக்க முடியவில்லை. சிலர் பரிகாரமாக ''வலுவான கடவுச்சொல்லைப் பயன்படுத்துதல்'' என வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

**எவ்வாறாயினும், இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

**வினா இல. 06**

உட்கட்டமைப்பு, நிதித் தொழினுட்பம், mobile learning மற்றும் வாடகைக் கார் சேவை நிறுவனம் தொடர்பான செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பிந்தைய தொழினுட்ப அபிவிருத்திகளைப் பற்றிப் பிடிக்கின்ற பரீட்சார்த்திகளின் ஆற்றல் பரீட்சிக்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

பல பரீட்சார்த்திகளால் பகுதி **(a)** மற்றும் **(b)** இற்கு சரியாக விடையளிக்க முடிந்திருந்தது.

எவ்வாறாயினும், குறைந்த எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் ஒரு வாடகைக் கார் கம்பனியின் தகவல் முறைமையில் AI தொழினுட்பத்தை நடைமுறைப்படுத்துகின்ற சாத்தியத்தன்மை பற்றி சிந்திக்கக் கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் வெற்றிகரமான எடுத்துக்காட்டுகளை வழங்கக்கூடியதாக இருந்ததைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. AI உள்ளிட்ட பிந்தைய தொழினுட்ப அபிவிருத்திகள் பற்றிக் கற்பதற்கு அவர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அது தொடர்பான பாடப்பரப்புகள் மேலும் பரீட்சிக்கப்பட வேண்டும்.

**இவ்வினாவின் தரத்தைக் கவனத்திற் கொள்ளும்போது, செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## பகுதி C

**வினா இல. 07**

இவ்வினா தரப்பட்ட விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கோட்பாட்டினை விளங்கிக்கொண்டு, அதனைத் தரப்பட்ட விவரணத்திற்குப் பிரயோகிப்பது எதிர்பார்க்கப்பட்டது. சில்லறை மருந்தக வணிகத்தில் ஈடுபடுகின்ற கம்பனி ஒன்றிற்குச் சாத்தியமான IT தந்திரோபாயங்களை அடையாளங் காண்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றல் பரீட்சிக்கப்பட்டது.

பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். இவ்வினாவுக்கு உயர் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளால் முழு விடைத்தாளுக்கு சிறந்த புள்ளிகளை அடையவதற்கான இயலுமை கிடைத்திருந்தது.

**(a)** இங்கு, இணையச் சேவை வழங்குநர் (ISP) ஒருவரைத் தெரிவு செய்யும்போது, தரப்பட்ட நிறுவனம் கவனத்திற் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளை அடையாளங் காணுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் ISP வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகளை அடையாளங் கண்டதன் மூலம் சிறந்த புள்ளிகளைப் பெற முடிந்தது.

**(b)** மூன்று முகாமைத்துவ மட்டங்களில், ஒவ்வொன்றிலும் பயன்படுத்தக்கூடிய ஒவ்வொரு தகவல் முறைமையை விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் ஒவ்வொரு முகாமைத்துவ மட்டத்திலும் பயன்படுத்தக்கூடிய தகவல் முறைமைகளை அடையாளங் காணத் தவறியிருந்தனர். சிலர் தொழிற்பாட்டு, தந்திரோபாய மற்றும் உத்திசார் முகாமைத்துவ மட்டங்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும், தகவல் முறைமைகளைக் குறிப்பிட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, வெறுமனே விடயங்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்ததால் அத்தகையவர்கள் இவ்வினாவுக்கான சில புள்ளிகளை இழக்க நேரிட்டது.

**(c)** தரவுச் சுரங்கத் தொழினுட்பங்களை கம்பனி தொழிற்படுத்தக்கூடிய பகுதிகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். இதனை, வினா இல. 07 இல் உள்ள பகுதிகளில் மிகவும் குறைவான செயலாற்றுகையைக் கொண்டிருந்த வினாவாக அடையாளங் காணலாம். சில பரீட்சார்த்திகளிடம் தரவுச் சுரங்கம் பற்றிய எவ்வித தெளிவான கருத்தும் காணப்படவில்லை.

தரப்பட்ட சில சரியான விடைகளாவன :

வாடிக்கையாளர் துண்டமாக்கல், இலக்குவைக்கப்பட்ட சந்தைப்படுத்தல், தொக்கு முகாமைத்துவம், மோசடியைக் கண்டுபிடித்தலும் பாதுகாப்பும், நிகழ்நிலை உத்தமமாக்கல், சில்லறை விற்பனை, சமூக ஊடகங்களில் ஈடுபடுதல், உற்பத்திப்பொருள் பரிந்துரை, தேவையை எதிர்வுகூறல், போட்டியாளர் பகுப்பாய்வு.

**(d)** இங்கு, இணையத்தளம் ஒன்றைக் கொண்டிருப்பதன் நன்மைகளை விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது. பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு மிகவும் சிறந்த முறையில் விடை அளித்திருந்தனர்.

**(e)** முகில் அடிப்படையிலான தீர்வொன்றின் ஊடாக வணிகச் செயற்பாட்டின் வினைத்திறன் அடையப்படுகின்ற வழிமுறைகளை விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது. பலரால், வணிகச் செயற்பாட்டின் வினைத்திறன் அடையப்படும் வழியொன்றாக முகில் கணினியியல் ஊடாக தரவுகளை இலகுவாக அடைவதை இனங்காண முடிந்திருந்தது. ஆனால், முகில் கணினியியலின் ஏனைய நன்மைகளைத் தவற விட்டிருந்தனர்.

**(f)** கம்பனி சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதால் எழக்கூடிய தனியுரிமை கரிசினைகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. மிக அரிதாகவே சரியான விடையைக் காண முடிந்தது. சில பரீட்சார்த்திகளால் இவ்வினாவை விளங்கிக்கொள்ள முடியவில்லை என்பதுடன் அவர்களால் தரப்பட்ட விடய ஆய்வுடன் வினாவைத் தொடர்புபடுத்த முடியவில்லை. பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளிப்பதற்கு முன் வினாக்களைக் கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் தகவல் முறைமையொன்று நிஜ வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படுவதை மேலும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுடன் நடைமுறைச் சிந்தனை ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

- - -

**செயல்திறனை மேம்படுத்துவதற்கான குறிப்புகள்:**

**(1)** முழுமையான பாடத்தையும் முற்றிலும் படித்தல்.

**(2)** வினாவினை தெளிவாக வாசிப்பதுடன் நேரடி விடை எதிர்பார்க்கும் வினாவிற்கு தேவையற்ற விளக்கங்கள் கொடுப்பதை தவிர்த்தல்.

**(3)** விசேடமாக பாடப்புத்தகம், நூல்கள், கையேடுகள், புத்தகங்கள், மத்தியவங்கி ஆண்டறிக்கை மற்றும் பாடத்துடன் தொடர்படைய ஏனையவற்றையும் படித்தல்.

**(4)** விடையெழுதும் போது தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்புடைய தத்துவார்த்த கருத்துக்கள் மற்றும் நடைமுறை அறிவினை ஒழுங்கமைந்த முறையில் முன்வைப்பதோடு தேவைப்படும் இடங்களில் உதாரணங்களை குறிப்பிடுதல் அவசியமாகும்.

**(5)** கையெழுத்து வாசிக்ககூடிய வகையில் இருப்பதோடு வினா இலக்கங்களை சரியான முறையில் தெளிவாக எழுதியிருப்பதை உறுதி செய்தல்.

**(6)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(7)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(8)** வினைத்திறனான நேர முகாமைத்துவத்தை பிரயோகித்தல்.

**(9)** விடைத்தளை கையளிக்கும் முன்னர் வினா இலக்கங்களை மீள சரிபார்த்தல்.

**(10)** நம்பிக்கையுடன் பரீட்சையில் அமர்தல் மற்றும் பரீட்சையில் சித்தி பெறுவதற்கான அதிகபட்ச எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல்.

- * * * -